சாட்சிய வாக்குமூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஷிதா)

1989 ம் ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்.

திருவாரூர்-610 001

தேதி: 02.06.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 47/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-13 |
| சாட்சியின் பெயர் | : | சிவராமன் |
| தந்தை பெயர் | : | அய்யாதுரை |
| கிராமம் | : | விராட்டி பத்து |
| தாலுக்கா | : | மதுரை |
| மாவட்டம் | | மதுரை |
| தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர், தர்மபுரி |
| வயது | : | 54 |

(இந்த சாட்சியம் காணொளி வாயிலாக பதிவு செய்யப்பட வேண்டுமென அரசு தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் கடிதம் ஏற்கப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சி காணொளி வாயிலாக பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டு அதன் படி 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 02 நாளாகிய இன்று சாட்சியானவர் தர்மபுரி முதன்மை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள காணொளி அறையில் முன்னிலையாகியுள்ளார். இதன் பொருட்டு தர்மபுரி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான திரு.முருகன் அவர்கள் முன்னிலையில் இவ்வழக்கு சாட்சியின் பெயர், முகவரி மற்றும் அடையாளம் ஆகியவை சாட்சிக்கு

அனுப்பப்பட்டுள்ள சாட்சிய அழைப்பாணையுடன் ஒப்பிட்டு இன்னார் என அடையாளம் காட்டினார்.

இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது. இதனை தொடர்ந்து சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.)

2ம் எதிரி ஆஜர். 1மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது தர்மபுரி மாவட்டம், தர்மபுரி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 06.08.2022 ஆம் தேதி நான் திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியிலிருந்தபோது திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல் முறை ஆணை C.No.75/SJ&HR/TVR/2022, Dated: 06.08.2022-ன் உத்தரவின் படி கொரடாச்சேரி காவல் நிலைய குற்ற எண்.161/2022-ல் இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 427, 506(2) உ/இ ப.சா& ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va)-ன் கீழான வழக்கின் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டதன் அடிப்படையில் வழக்கை நான் புலன் விசாணைக்கு எடுத்துக்கொண்டேன். மேற்படி செயல் முறை ஆணை **அ.சா.ஆ-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2.** கடந்த 06.08.2022 ஆம் தேதி இவ்வழக்கின் சம்பவ இடமான அம்மையப்பன் கடைத்தெருவிற்கு சென்று அங்கு உள்ள R.R வணிக வளாகத்தில் உள்ள ஜனபிரியா என்ற மளிகை கடை முன்பு 23.30 மணிக்கு சாட்சிகள் கர்ணா மற்றும் நரேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-10** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-11** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 07.08.2022 ஆம் தேதி சம்பவ இடத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் ஷோக்கேஸிலிருந்து உடைந்த

சா.பொ-1 ஆன கண்ணாடி துண்டுகள்-3 மற்றும் சா.பொ-2 ஆன வெள்ளை நிறம் உடைய உடைந்த குடிநீர் பைப் -1 ஆகியவைகளை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ-12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சா.பொ-1 மற்றும் 2 ஆகியவைகளை படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன். அந்த படிவம்- 91 **அ.சா.ஆ-13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் கர்ணா மற்றும் நரேந்திரன் ஆகியோர்களை தனி தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**3.** பின்னர் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக இருந்த இவ்வழக்கின் அ.சா-1 ரவி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே மருத்துவமனையில் அவருக்கு உதவியாக இருந்த அ.சா-5 ராஜா என்பவரை விசாணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் புறப்பட்டு அம்மையப்பனுக்கு சாட்சிகள் அ.சா-2 ஜின்னா, அ.சா-3 ஜோதிபாசு, அ.சா-4 ரமேஷ் ஆகியோர்களை தனி தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காலை 9.00 மணிக்கு எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் தைகால் மெயின் ரோடு புதிய பாலம் கட்டும் அருகே இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட 1ம் எதிரி சஞ்சை, 2ம் எதிரி பிரசாத், 3ம் எதிரி ராஜசேகர் ஆகியோர்களை காரணம் கூறி கைது செய்தேன். அப்போது 1ம் எதிரி சஞ்சை என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அ.சா-7 திருநாவுகரசு மற்றும் சாட்சி விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளுடன் புறப்பட்டு நிலையம் வந்து எதிரிகளை தக்க வழி காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகள் அ.சா-7 திருநாவுக்கரசு மற்றும் விஸ்வநாதன் ஆகியோர்களை தனி தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**4.** கடந்த 15.09.2022 ஆம் தேதி இவ்வழக்கில் காயம் பட்ட நபருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் அ.சா-9 பிரபா என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ-3 ஆன விபத்து பதிவேட்டை பெற்றேன். காயம் பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அருண் பிரகாஷ் என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ-4 ஆன காயச்சான்றிதழ் பெற்றேன்.

**5.** வழக்கில் அ.சா-1 ரவி மற்றும் எதிரிகளுக்கு சாதி சான்றிதழ் கோரி திருவாரூர் வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 16.09.2022 ஆம் தேதி இவ்வழக்கின் அ.சா-1க்கு சாதிசான்றிதழ் வழங்கிய அ.சா-8 நக்கீரன் என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ-2 ஆன சாதி சான்றிதழ் பெற்றேன். இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகளுக்கு சாதி சான்றிதழ் வழங்கிய திருவாரூர் மண்டல துணை வட்டாச்சியர் அ.சா-11 சரவணனகுமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ-5 முதல் 7 வரையான சாதி சான்றிதழ்கள் பெற்றேன்.

**6.** இவ்வழக்கின் அ.சா.ஆ-8 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த கொரடாச்சேரி உதவி ஆய்வாளர் அ.சா-12 மோகன்ராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 427, 506(2) உ/இ ப.சா& ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va) என்பதை இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 427, 506(2), 34 உ/இ ப.சா& ப.ப (வ.கொ.த) சட்டப்பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va) என சட்டப்பிரிவுகளை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாயர் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ-14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து கடந்த 16.09.2022 ஆம் தேதி எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**7.** அ.சா-4 ரமேஷ் என்பவர் எனது விசாரணையில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளார். அ.சா-6 நரேந்திரன் அ.சா.ஆ-10 ஆன பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ-12 ஆன கைப்பற்றுதல் மகஜரில் தயார் செய்யும் போது சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துள்ளார். அ.சா-7 திருநாவுக்கரசு என்பவர் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும் போது உடனிருந்தார் என எனது விசாரணையில் வாக்குமூலம் அளித்துள்ளார். தற்போது நீதிமன்றத்தில் அ.சா4, அ.சா6 மற்றும் அ.சா.7 ஆகியோர்கள் சம்பவம் பற்றி தெரியாது என்று கூறியிருந்தால் அது தவறு.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

எதிரி தரப்புல் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கும் படி மனு தாக்கல் செய்ததன் அடிப்படையில் ஒத்திவைக்கப்படுகிறது.

(சாட்சியம் முடிந்த பின்னர் பதிவு செய்யப்பட்ட முதல் மற்றும் குறுக்கு விசாரணை வாக்குமூலம் அச்சு நகல் செய்யப்பட்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு மறுமுனையில் தர்மபுரி முதன்மை மாவட்ட நீதிமன்றதில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான திரு.முருகன் அவர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டு பிரிண்ட அவுட் எடுக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு பின்னர் தபாலில் அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. இவற்றிற்கு ஆதரவாக, ஒருங்ணைப்பாளரும் கையொப்பம் செய்து அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது.)

இன்று 02.06.2026 மறுமுனையில் அங்கீகரிக்கதக்க ஒருங்கிணைப்பாளர் உதவியுடன் என் முன்னிலையில் காணொலி காட்சி மூலம் சாட்சி ஆஜராகி, சாட்சியம் சொல்ல சொல்ல கணினி தட்டச்சு மூலம் பதிவு செய்யப்பட்டு, முழு சாட்சியம் அடங்கிய PDF File சாட்சிக்கு அவர் ஆஜராகியுள்ள மறுமுனைக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு, மறுமுனையில் அதை ஒருங்கிணைப்பாளர் பதிவிறக்கம் செய்து பிரிண்ட் அவுட் எடுத்து, அதனை சாட்சி படித்துப்பார்த்து, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, மறுமுனை ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில் கையொப்பம் செய்தும், பின்னர் இந்நீதிமன்றத்திற்கு தபால் மூலமாக அவற்றை அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. அவ்வாறே அசல் சாட்சிய வாக்குமூலம் இந்நீதிமன்றத்தில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டு என்னால், கையொப்பம் செய்யப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.06.02 15:56:41 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியல் வகுப்பினர் மற்றும்
பழங்குடியினருக்கான (வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம்,
திருவாரூர்.